INSTITUTE FOR HEALTH POLICY

**72, Park Street, Colombo 2, Sri Lanka**
Tel: +94 11 231 4041/2/3/5 Fax: +94 11 231 4040
e-mail: info@ihp.lk web: www.ihp.lk twitter: @ihplk

## PRESS RELEASE

**திகதி வரை தடையாணை**

திகதி: புதன், ஏப்ரல் 27, 2022
நேரம்: 0800 AM Sri Lanka Time

**மேலும் விவரங்களுக்கு தொடர்புகொள்ள**

டல்ரீன் பாத்லாட்
மின்னஞ்சல்: dalreen `at’ ihp.lk

**பிரதான ஆராய்ச்சியாளருடன் தொடர்புகொள்ள**

மருத்துவர். ரவி ரன்னன்-எலிய
மின்னஞ்சல் : ravi `at’ ihp.lk Twitter: @ravirannaneliya

# பொருளாதார நெருக்கடியின் காரணமாக அனைத்து அரசியல்வாதிகளின் மீதும் பொதுமக்களுக்கான வெறுப்பு வளர்கின்றது, ஆனால் ஜனாதிபதி ராஜபக்ஷவின் பாதிப்பு பெரிது

தற்போதைய பொருளாதார நெருக்கடியினால் எந்தவொரு அரசியல்வாதிக்கும் பொதுமக்களிடையே ஒப்புதல் இல்லாதது பரவலாகக் காணப்படுகிறது. சுகாதார கொள்கை நிறுவனத்தின் (IHP) SLOTS கருத்துக்கணிப்பு ஆய்வின்படி அரசாங்கத்திலும் எதிர்க்கட்சியிலும் உள்ள அரசியல்வாதிகள் மீதான விருப்பு மிகக் குறைந்த மட்டத்திற்குச் சரிந்துள்ளது. இதில் கடுமையாக பாதிக்கப்பட்டவர் ஜனாதிபதி கோடாபய ராஜபக்ஷ. இவருக்கு (பொதுமக்களிடையே)சாதகமான மனப்பான்மை, ஆகஸ்ட்-செப்டம்பர் 2021 முடக்கத்தின் போது +50 இல் இருந்து ஏப்ரல் 2022 இல் -80 ற்கு சரிந்துள்ளது.

IHP SLOTS கணிப்பு செப்டம்பர் 2021 முதல் அரசியல்வாதிகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்தாபனங்களுக்கு (பொதுமக்களிடையே)சாதகமான மனப்பான்மையை பின்தொடர்ந்துவருகிறது. அச்சமயத்திலிருந்து ஜனவரி 2022 வரை பொதுமக்களிடையே ஜனாதிபதி ராஜபக்ஷவிற்கு சாதகமான மனப்பான்மைப்புள்ளிகள் உயர்வாகவே இருந்தன. மாறாக எதிர்க்கட்சி தலைவரான சஜித் பிரேமதாசவிற்கு சாதகமான மனப்பான்மைப்புள்ளிகள் பெரும்பாலும் மறையாகத்தான் இருந்தன. ஆனால் கடந்த இரண்டு மாதங்களில் இவை அனைத்தும் மாறிவிட்டன. ஜனாதிபதியின் சாதகமான மனப்பான்மைப்புள்ளிகள் சரிந்துவிட்டன.

பிப்ரவரி மாதத்தில் +20 இல் இருந்த ஜனாதிபதி ராஜபக்ஷவின் நிகர சாதகமான மனப்பான்மைப்புள்ளிகள் ஏப்ரல் மாதத்தின் முதல் மூன்று வாரங்களில் -80 ற்கு கீழ் விழுந்துவிட்டது. அதாவது பொதுமக்களிடையே ஜனாதிபதிக்கு சாதகமான அபிப்பிராயம் உடைய ஒருவருக்கு, ஜனாதிபதிக்கு சாதகமற்ற அபிப்பிராயமுடைய ஒன்பது பேர் உள்ளனர் என்பது இதன் பொருள். ஏனைய பெரும்பாலான அரசியல்வாதிகளைக்காட்டிலும் இந்த சரிவு மிகவும் வேகமாகனதாகவும் பரவலானதாகவும் இருந்தது. மார்ச்-ஏப்ரல் காலத்தில் ஜனாதிபதியின் சாதகமான  மனப்பான்மைப்புள்ளிகள்(-40) பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ (-33) மற்றும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவை விடவும்(-26) கீழே சரிந்தது.

ஜனாதிபதிக்கு சாதகமான மனப்பான்மை சரிவில் பெரும்பகுதி வறியவர்கள், பெண்கள், நகர மற்றும் வயதுவந்த (18 வயதிற்கு மேற்பட்ட) சிங்களவர்களிடையே காணப்படுகிறது. ஏழ்மையான  இலங்கையர்களில் மூன்றில் ஒரு பங்கு நபர்களிடையே ஜனாதிபதியின் சாதகமான மனப்பான்மை மறைப்புள்ளிகள்(-63) சுமாரான மறைப்புள்ளிகளை க் கொண்ட சஜித் பிரேமதாசவைக்(-6) காட்டிலும் மிகவும் மறையாக உள்ளன. பெண்களின் இடையே எ எடுத்துக்கொண்டால், சஜித் பிரேமதாசவைக் காட்டிலும் ஜனாதிபதிக்கு நெடுங்காலமாக இருந்த சாதக நிலையை அவர் இழந்துவிட்டார். பெண்களின் கண்ணோட்டம் இப்பொழுது இருவருக்கும் சாதகமாக இல்லையென்றாலும் சஜித் பிரேமதாசவைக்(-27) காட்டிலும் ஜனாதிபதிக்கு (-42) சாதகப்புள்ளிகள் குறைவாகவுள்ளது. எதிர்கட்சித் தலைவருக்கு சாதகமான மனப்பான்மையில் மிகவும் சுமாரான சரிவு குறைவாக செறிவூட்டப்பட்டது என்றாலும் பெண்களிடையே அவருக்கான சாதகமான மனப்பான்மைப்புள்ளிகளின் சரிவு குறிப்பிடத்தக்கது. ஆனால் இது ஜனாதிபதியின் புள்ளிகளின் சரிவைவிடக்  குறைவானதாகும் .

சாதகமான மனப்பான்மைத்தன்மையில் வீழ்ச்சியானது SLOTS ஆய்வில் முன்னர் மிகவும் பிரபலமான அமைச்சராக இருந்த டாக்டர் சுதர்ஷனி பர்னாண்டோபுள்ளே உட்பட அனைத்து அரசியல்வாதிகளையும் பாதித்துள்ளது. யூ என் பி தலைவர் ரணி ல் விக்ரமசிங்கவுக்கும் சாதகமான மனப்பான்மைப்புள்ளிகள் சரிந்தன. இவரைக்காட்டிலும் ஜெ வி பி தலைவர் அனுர திஸ்ஸாநாயகவின் சரிவு அதிகமானதாகும்.

மாறாக சுகாதார அமைச்சு, முப்படையினர் மற்றும் GMOA (அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்) உட்பட, அரச ஸ்தாபனங்கள் மற்றும் பிற அமைப்புகளுக்கான சாதகமான மனப்பான்மைப்புள்ளிகள் சிறிதளவே சரிந்துள்ளன  . பொதுமக்கள் குறிப்பாக அரசியல்வாதிகளைத்தான் நிராகரிக்கின்றனர் என்பதை இது  சுட்டிக்காட்டுகிறது.

தற்போதைய நெருக்கடியைத் தீர்த்துவிடுவார்கள் என்று எந்த ஒரு தனிக் கட்சி மீதும் பொதுமக்களுக்கு நம்பிக்கை இல்லை என்பதை அனைத்து அரசியல்வாதிகளின் மீதான பொதுமக்களின் அதிக அளவிலான வெறுப்பு சுட்டிக்காட்டுகின்றது என்று மருத்துவர். ரவி பி. ரண்ணன்-எலிய, நிர்வாகப் பணிப்பாளர், சுகாதார கொள்கை நிறுவனம் (IHP) கருத்து தெரிவித்தார். மேலும், சமூகத்தில் அனைத்து தரப்பினரின், குறிப்பாக வறியவர்களின், சம்மதத்தைப் பெறக்கூடிய மதிப்பீடுகளின் தொகுப்பு ஒன்றை வடிவமைத்து மக்களிடம் கொண்டுசெல்வது எவ்வாறு என்று கண்டறியவும்  வரும் மாதங்களில் செயற்படுத்த வேண்டிய கடினமான மதிப்பீடுகளை தக்க வைக்க தேவையான திறமை கொண்ட தலைமையை அளிக்கவும் அரசியல் ஸ்தாபனங்களுக்கு புதியதோர் சிந்தனை தேவை என்பதை இது சுட்டிக்காட்டுகின்றது என்றும் கூறினார்.

IHP இன் இலங்கை கருத்து கண்காணிப்பு ஆய்வு (SLOTS) தேசிய அளவில் பொதுமக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மாதிரிகளோடு அன்றாடம் தொலைபேசி மூலம் நடத்தப்படும் ஒரு ஆய்வாகும். இந்த ஆய்வில் பொதுமக்களின் தற்போதைய கண்ணோட்டம் மற்றும் அன்றாட வாழ்க்கை /சூழ்நிலை தொடர்பாக கேள்விகள் கேட்கப்படும். SLOTS ஆய்வு, பொது நபர் அல்லது நிறுவனத்தைப்பற்றி சாதகமான அபிப்பிராயம் உள்ளதா அல்லது சாதகமல்லாத அபிப்பிராயம் உள்ளதா என்று பங்கேற்பாளர்களிடம் கேட்டு, அதன்மூலம் சாதகமான மனப்பான்மையை கணிக்கின்றது: அதாவது ஆம், இல்லை என்ற பதில்களின் சராசரி, மொத்த சாதக மனப்பான்மைபுள்ளியாக கணிக்கப்படுகின்றது. புள்ளிகளின் வீச்சு +100 இல் இருந்து (அனைவரின் கண்ணோட்டமும் சாதகமானது), -100 (அனைவரின் கண்ணோட்டமும் சாதகமல்லாதது) வரையிலாகும். வெளியிடப்பட்ட மதிப்பீடுகள் பால், வயது, வருமான நிலை, இனம், துறை, மாகாணம்  மற்றும் 2019 ஜனாதிபதி தேர்தலில் மக்கள் எவ்வாறு வாக்களித்தனர் என்பதன் அடிப்படையில் மொத்த சனத்தொகையை பிரதிநிதித்துவப்படுத்தும் மதிப்பீடு என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள ஆய்வின் பதில்களை IHP சரிசெய்கிறது. சாதகமான மனப்பான்மை செப்டம்பர் 2021 முதல் 24 ஏப்ரல் 2022 வரை 4,603 வயது வந்தவர்களுடன் நடத்தப்பட்ட நேர்காணல் மூலம் மதிப்பிடப்பட்டது.

### ihp.lk இல் முழு அறிக்கை கிடைக்கப்பெறும்

Institute for Health Policy, April 2022, “SLOTS Favourability Ratings: Methodology for tracking public favourability”, SLOTS Report #2022-03.

Institute for Health Policy, April 2022, “Economic crisis results in growing public disaffection with politicians, but particularly with President Rajapaksa”, SLOTS Report #2022-04.

### IHP பற்றி

IHP கொழும்பு, இலங்கையில் உள்ள பிறர்சார்பற்ற மற்றும் கட்சிசார்பற்ற ஆய்வு மையம். SLOTS ஆய்வின் பிரதான ஆய்வாளர் மருத்துவர் ரவி ரண்ணன்-எலிய ஆவார். இவர் பொது கருத்துக்கணிப்பு செய்வதில் ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற்றதோடு மூன்று தசாப்தங்களாக  பல்வேறு ஆய்வுகளை நடத்திவருகிறார்.

## நிதியுதவி

நீலன் திருச்செல்வம் அறக்கட்டளை மற்றும் ஏனையோரின் நிதியுதவி மூலம் SLOTS ஆய்வு நடைபெறுகிறது. ஆனால் ஆய்வின் வடிவமைப்பிலோ, பகுப்பாய்விலோ மற்றும் கண்டுபிடிப்புகளின் பொருள்விளக்கத்திலோ ஆதரவாளர்கள் பங்கு வகிக்கவில்லை. மேலும் விவரமான தரவுகள் மற்றும் முடிவுகளை பெற விரும்பும் நபர்கள் IHP உடன் தொடர்பு கொள்ளலாம்.